**SNS academy**
a fingerprint school
*Sincerity, Nobility and Service*

பெயர்: **நவம்பர் மாதத் தேர்வு - 2019** மதிப்பெண்கள்: 40

வகுப்பு: 8 (2L) பாடம் : **தமிழ்** தேதி: 4.11.19

## பகுதி - அ(வாசித்தல்)

**I. பின்வரும் பத்தியைப் படித்துப் பல்விடை வினாக்களுக்கு விடை தருக. (5)**

அகத்தை நல்ல எண்ணங்களால் தூய்மை செய்வது போலப் புறத்தை நீராலும் காற்றாலும் ஞாயிற்றொளியாலும் தூய்மை செய்தல் வேண்டும். நீரும் காற்றும் ஒளியும் மனிதனை வளர்க்கும் இயற்கைத் தெய்வங்கள் ஆகும். ஊற்று நீரில் நாள்தோறும் காலையில் தலை முழுகல் வேண்டும். மூழ்குதற்குத் தண்ணீரே சால்புடைத்து. நரம்புகட்குத் திண்மையும் உரமும் ஊட்டும் நீர்மை தண்ணீருக்குண்டு. நறுந் தண்ணீர் கிடைக்காவிடில் வெந்நீரில் குளிப்பது நலம். வெந்நீரையும் தண்ணீரையும் கலந்து குளிப்பது நலன் பயக்காது. நோயாளர், மெலியர், ஒரு சில மூளை உழைப்பாளர் முதலியோர் வெந்நீரில் மூழ்கல் நலமென்று சில மருத்துவ அறிஞர்கள் கூறுகின்றனர். தண்ணீரினும் வெந்நீர் அழுக்கை விரைவில் போக்கும். ஆனால் தண்ணீரைப் போல் வெந்நீர் நரம்புகளுக்குத் திண்மை தராது.

**வினாக்கள்**

i. அகத்தை தூய்மை செய்வது
அ) இறைவன் அருள் ஆ) வழிபாடு
இ) பிறருக்கு நன்மை செய்தல் ஈ) நல்ல எண்ணங்கள்

ii. நீரும் காற்றும் வெளியும் மனிதனை வளர்க்கும்
அ) இயற்கைத் தெய்வங்கள் ஆ) பிரபஞ்சங்கள்
இ) மும்மூர்த்திகள் ஈ) இயற்கை அண்டங்கள்

iii. திண்மை என்பதன் பொருள்
அ) வலிமை ஆ) உரம் இ) சிறப்பு ஈ) பெருமை

iv. நீர்மை என்பதன் பொருள்
அ) நீரிலுள்ள மை ஆ) சூடு இ) மென்மை ஈ) இயல்பு

v. வெந்நீரையும் தண்ணீரையும் கலந்து குளிப்பது
அ) நலம் பயக்கும் ஆ) நலம் பயக்காது
இ) தூய்மை பயக்கும் ஈ) தெளிவு பயக்கும்

## பகுதி - ஆ(எழுதுதல்)

**2. மூன்றில் ஒரு பங்காக சுருக்கி எழுதுக.** (5)

கல்வி ஓர் அழியாச் செல்வம் என்று விளக்கிய வள்ளுவர்அந்த அழியாச்

செல்வமாகிய கல்வியைக் கற்பதினால் வரும் சிறப்புகளையும் குறிப்பிடுகிறார். அது கண் போன்றது என்கிறார். 'கண்' என்றால் தமிழில் ஒளி என்று பொருள். கல்வி எவ்வாறு ஒளியாக விளங்குகிறது என்பதையும் விளக்குகிறார். எல்லா உறுப்புகளும் சரியாக இருந்தும், 'கண்' இல்லாவிட்டால் ஒருவனால், பொருள்களையும், காட்சிகளையும், இயற்கையின் அழகுகளையும் காண இயலாது. எனவே அவன் ஒரு முழுமை பெற்ற மனிதனாகக் கருதப்படமாட்டான். இந்த உண்மையின் அடிப்படையில், கல்வியின் முக்கியத்துவத்தையும், தேவையையும் வற்புறுத்த விரும்பிய வள்ளுவர், கல்வியைக் கண்ணோடு ஒப்பிடுகிறார். நம் வாழ்க்கையின் இன்பதுன்பங்கள் பலவற்றிற்கும், புறக்காட்சிகளும், நிகழ்ச்சிகளும்தானே காரணம்? நாம் பார்க்கும் சில விபத்துகள் நம் உள்ளத்தைப் பெரிதும் பாதிக்கின்றன. நம் கண்முன்னாலே அடிக்கடித் தோன்றி மறைகின்றன. இந்தக் காட்சியை நாம் பார்த்திருக்காவிட்டால், எந்தப் பாதிப்பும் ஏற்படாது இல்லையா? மகிழ்ச்சியோ, துன்பமோ, நாம் பார்க்கும் காட்சி அல்லது நிகழ்ச்சியால் தானே அமைகின்றது? இந்த அனுபவத்தை அல்லது நுகர்வை எது வழங்குகிறது? கண். காலம்காலமாக அறிஞர்களும் சான்றோர்களும் தாம் கண்டவற்றையும், அவற்றின் அடியில் எழுந்த சித்தாந்தங்களையும், கொள்கைகளையும், கண்டுபிடிப்புகளையும், அறிவுரைகளையும், இன்ன பிறவற்றையும் நம் புலனுக்குக் கொண்டு வருவது கல்வியே. இக்காரணம் கருதி, வள்ளுவர், கல்வியைக் கண் என்கிறார்.

## பகுதி - இ ( இலக்கணம், மொழிப்பயிற்சி )

**3. கூறியவாறு செய்க:** (10)

i. தொகைநிலைத்தொடர் ________ வகைப்படும்.

அ. 4 ஆ. 6 இ . 3

ii. முக்காலத்திற்கும் பொருந்தும்படி பொருள் தருவது _____

அ. பண்புத்தொகை ஆ. வினைத்தொகை இ. உவமைத்தொகை

iii. நாங்காம் வேற்றுமையின் உருபு ______

அ. இன் ஆ. கு இ. இல்

iv. தொடி என்பதன் பொருள்

அ. பனை மரம் ஆ. வளையல் இ. தாய்

v. மாலா வா! என்பது _______ தொடர்.

அ. எழுவாய்த்தொடர் ஆ. இடைச்சொல் தொடர் இ. விளித்தொடர்

vi. அடுக்குத்தொடர்

அ. பாம்பு பாம்பு ஆ. சலசல இ. படபட

vii. ஒன்றுக்கும் மேற்பட்ட சொற்களில் உம் என்னும் உருபு வெளிப்பட வருவது

அ. உம்மைத்தொகை ஆ. எண்ணும்மை இ. உவமைத்தொகை

viii. இடி ____ மழை வந்தது

அ. இருந்து ஆ. உடன் இ. கொண்டு

ix. செம்மரம் என்னும் சொல் _____த் தொகை

அ. வினை ஆ. அன்மொழி இ. பண்பு

x. தொகாநிலைத்தொடர் ________ வகைப்படும்.

அ. 7 ஆ.9 இ.12

**பகுதி - ஈ (இலக்கியம்)**

**4. வினாக்களுக்கு விடை தருக** (12)

i. திருக்கேதாரத்தைச் சுந்தரர் எவ்வாறு வருணனை செய்கிறார்?

ii. நமக்கு இருக்க வேண்டிய பண்புநலங்களாக நல்லந்துவனார் கூறுவது யாது?

iii. மூங்கிலால் செய்யப்படும் பொருட்கள் குறித்து எழுதுக.

**5. விடுபட்ட திருக்குறள் சீர்களை எழுதுக.** (2)

i. இதனை இதனால் இவன்முடிக்கும் ________ ஆராய்ந்தால்

அதனை அவங்கண் _______.

**6. பின்வரும் துணைப்பாட வினாவிற்கு விடையளி:** (6)

i. நரம்புக் கருவிகள் குறித்து எழுதுக